(முற்பகல்-9.10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாற்றுவது என்றாலும் இடப் பிரச்சினையுடன் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உணர்வுகளை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய அரசு சித்தமாக இருக்கிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள கம்மம்பட்டி என்ற பகுதியிலே இந்தப் பேருந்து நிலையத்தை மாற்றுவதற்கு ஒரு உத்தேசம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா அல்லது இந்த திட்டத்தை கைவிட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

ஊராட்சி ஒன்றியங்களில் வசூலிக்கப்படும் உள்ளூர் மேல்வரி.

148—(*வினா எண். 8027) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்விப் பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டு விட்டதால் ஊராட்சி ஒன்றியங்களில் கல்விக்காக வசூலிக்கப்படும் லோக்கல் சர்சார்ஜ் வசூலிப்பதைக் கைவிடச் செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இப்படிப்பட்ட ஊராட்சிப் பகுதிகளிலே பல்வேறு இடங்களிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது அந்த இடம் இட்டு நிரப்பாமலும் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் சர்சார்ஜ் நியாயமானதாக இருக்கின்றதா என்பதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா ? இப்படிப்பட்ட குறைகளை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன், இந்த லோகல் சர்சார்ஜ் என்பது கல்விக்காக மட்டுமல்ல. பொது நிதிக்காக வசூலிக்கப்படுகின்றது. கல்விக்கும் இதிலிருந்து செலவு செய்யப்படுகிறது.